[1974 மார்ச் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அது பரிட்சைக்குரிய பாடமாக வைக்கப்படவில்லை. இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 உயர்நிலைப் பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதிலே 50 எண்கள் என்ற அளவுக்கு நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டு, இப்பொழுது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமான சூழ்நிலையை ஏற்படுத்துமேயானால், அதையும் பரிட்சைக்குரிய பாடமாக ஆக்கலாமா என்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது இது பரீட்சார்த்தமான நிலையில் இருந்து வருகிறது.

Grants to Singanallur Municipal School

* 315 Q.—THIRU N. DENNIS.—Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Singanallur Municipal Council has requested the Government to give advance grant to pay the teaching staff during September-October, 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சிங்கநல்லூர் நகராட்சிக்கு முன்மானியம் எதுவும் வழங்கப்படவில்லை. எனினும் 1973 ஆம் ஆண்டு—

(1) 31—3—1972 வரை ஆரம்பக் கல்விக் கணக்கில் சேர்ந்திருந்த பற்றுக்குறையினைத் தீர்க்க ரூ. 2,19,000 மானியமும்,

(2) 31—3—1972 வரை ஆரம்பக் கல்விக் கணக்கில் சேர்ந்திருந்த பற்றுக்குறையினைத் தீர்க்க ரூ. 1,00,000 கடனும் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டது.

திரு. என் டென்னிஸ் : பொதுவாக வாழ்க்கைச் செலவை நடத்த சம்பளத்தையே வைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வித காலதாமதத்தினால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஆசிரியர்களுக்கு இந்த அட்வான்ஸ் பேமெண்டு அல்லது வேறு ஏதாவது ஒரு முறையைக் கையாண்டு இவர்களுக்கு சம்பளம் உடனடியாகக் கிடைப்பதற்கு வழி வகுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகராட்சிகள் கல்வி வரியின் மூலம் வசூலிக்கும் பணத்தை ஏற்கனவே பொதுக் கணக்கில் வைத்து, பொதுவாகச் செலவழித்து வந்ததால், பொதுத் துறைக்குச் செலவழித்துவிட்டு கல்வித் துறைக்குச் செலவழிக்காமல் இருந்த காரணத்தினால் பற்றாக்குறை ஏற்பட்டு பல சமயங்களில் அவதியுறக்கூடிய நிலை ஏற்பட்டது. ஆகவே, 1973-ம் ஆண்டில் ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அதன் மூலம் அந்தப் பணத்தை ஆரம்பக் கல்விக் கணக்கில்தான், தனி பதிவேட்டில் வைக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கல்வி வரியின் மூலம் வசூலாகும் பணத்தையும், அரசாங்கக் கணக்கில் கொடுக்கும் மான்யத்தையும் இப்படி தனிக் கணக்கில் வைத்து கல்விக்கு மட்டுமே செலவழிக்க வேண்டும், வேறு எந்தப் பொதுத் துறைக்கும் செலவழிக்கக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. அதைப் போலவே நகராட்சிகளில் உள்ள பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டும் என்று 35 நகராட்சிகளுக்கு மான்யமாகவும் கடனாகவும் தொகைகள் வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப் பட்டு, தனிக் கணக்கு வைத்து, அவ்வப்பொழுது முதல் தேதியே சம்பளம் கிடைப்பதற்கு வழிவகை செய்திருப்பதினால் ஓரளவுக்கு நிறைவு ஏற்பட்டிருக்கிறது.

மூங்கில்பாடிக்கு புதிய பள்ளி

* **316 வினா.—திரு. வீ. செல்லதுரை :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மூங்கில்பாடியில் பொதுமக்களால் சுமார் ரூ. 15,000 பெறுமானமுள்ள பள்ளிக் கட்டடம் கட்டி 2½ ஆண்டுகள் ஆகியும் அதை அரசு ஏற்று நடத்துவதில் ஏற்படும் தாமதம் குறித்து அண்மையில் அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுக்கு முறையீடு எதும் வரவில்லை. ஆனால் ஓமலூர் ஒன்றிய ஆணையர் இது குறித்து பிரேரணைகளை சங்ககிரி மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாக சேலம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அனுப்பியிருக்கிறார். இது பள்ளிக் கல்வி இயக்குநருக்குப் பரிந்துரை செய்யப் பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநர் மூங்கில்பாடி கிராமம் பள்ளி